**கவனிக்க**.-2018.12.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2104 - 2018 දෙසැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2018.12.28

*2104 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 2418 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 2419 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 2419 |
| விஜலக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 2420 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2019, சனவரி மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


*2417-B 81480-403 (2018/12)*

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2018 இன் இல. 1151*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை விஞ்ஞான சேவையின் 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த கலாநிதி செல்வி எஸ். ஏ. கிருஷ்ணராஜா அவர்கள் 2018, சனவரி மாதம் 29 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*12- 958/1*

---

*2018 இன் இல. 1152*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. கே. டி. சி. எஸ். குமாரதுங்க அவர்கள் 2018, மே மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை ஆயுர்வேத ஆணையாளராக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*12- 958/2*

---

*2018 இன் இல. 1153*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை திட்டமிடல் சேவையின் 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எச். எம். ஜயதிலக்க ஹேரத் அவர்கள் 2018, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மூன்று (03) மாத காலத்திற்கு மாத்திரம் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*12- 958/3*

---

*2018 இன் இல. 1154*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. சுனந்த காரியப்பெரும அவர்கள், 2018, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் அதிபதியாக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*12- 958/4*

---

*2018 இன் இல. 1155*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. கே. எம். ஜீ. எஸ். என். களுவெவ அவர்கள், 2018, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை அவருடைய நிரந்தரப் பதவிக்கான கடமைகளுடன் தகவல் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*12- 958/5*

*2018 இன் இல. 1156*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. தம்மிக்க முத்துகல அவர்கள், 2018, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மூன்று (03) மாத காலத்திற்கு மாத்திரம் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

12- 958/6

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*2018 இன் இல. 1157*

### அறிவித்தல்

1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 (3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகிய நான் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணிகளை சம்பந்தப்பட்ட நீதி நிருவாகப் பிரிவுகளுக்கான சமாதான நீதவான்களாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்களாகவும் நியமிக்கின்றேன்.

| தொடர் இல. | பெயர் | முகவரி | நீதி நிருவாக வலயம் |
|---|---|---|---|
| 1. | சட்டத்தரணி திரு. மத்தும படபேதிகே மஹிந்த சரத் அபேசிங்ஹ | 475, காலி வீதி, நல்லூருவ, பாணந்துறை | பாணந்துறை |
| 2. | சட்டத்தரணி திருமதி தரங்கா பிணிதிய | 90/1, ஹக்மன வீதி, மாத்தறை | மாத்தறை |

சுசில் பிரேமஜயந்த,
பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சு.

பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சு,
2018, நவெம்பர் 28.

12-697

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2018/2019 இற்கான பெரும்போக கூட்ட தீர்மானங்களை அறிவித்தல் - கந்தேஎல திட்டம்

வெலிமடை பிரதேச செயலகப் பிரிவின் கந்தஎல திட்டத்தின் 2018/2019 இற்கான பெரும் போகத்திற்கான கூட்டம் 2018.11.23 ஆந் திகதி கெப்பெடிபொல நீர்ப்பாசன திட்ட அலகு அலுவலகத்தில் நடைபெற்றதுடன் அதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | பயிரிடுவதற்கு முன்மொழியப்பட்ட நிலப்பரப்பு | 2300 ஏக்கர் |
| 2. | பயிரிடுவதற்கு முன்மொழியப்பட்ட பயிரின் வகை | நெல்/கலப்பு மரக்கறி |
| 3. | கால்வாய் வரப்பு சுத்தம் செய்யும் இறுதித் திகதி | 2018.12.15 |
| 4. | முதல் முறை நீர் விநியோகித்தல் | 2018.11.29 |
| 5. | நிலத்தை பண்படுத்தி முடிக்கும் திகதி | 2018.12.31 |
| 6. | பயிரிட்டு முடித்தல் | 2019.01.15 |
| 7. | தவணை முறையில் நீர் விநியோகித்தல் | சந்தர்ப்பத்திற்கு ஏற்ப |
| 8. | இறுதியாக நீர் விநியோகித்தல் | 2019.05.15 |
| 9. | விளைச்சல் அறுவடை செய்து முடித்தல் | 2019.05.31 |
| 10. | கால்வாய் சுத்தப்படுத்தாமைக்கான தண்டப்பணம் | 1/4 ஏக்கருக்கு ஒருநாள் கூலி ரூ. 1,400 |

டப். எம். சீ. வீரசிங்க,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை,
2018, திசெம்பர் 05.

12-780

## கொடபிடிய முஸ்லிம் உற்சவம் - 2018

மாத்தறை மாவட்டத்திலே கொடபிடிய (போர்வை) முஹியத்தீன் பள்ளி வாசலின் வருடாந்தக் கொண்டாட்டம் 2018, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி ஆரம்பமாகி திசெம்பர் 30 ஆந் திகதி முடிவுறும் என்பதை (175 ஆம் அதிகாரம்) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 1954, சனவரி மாதம் 08 ஆந் திகதி இலக்கம் 10630 கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் 03 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகிறது.

1954, சனவரி மாதம் 08 ஆந் திகதி இலக்கம் 10630 கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்ட ஒழுங்கு விதிகள் மேற்கூறப்பட்ட காலப் பிரிவில் குறித்த ஒழுங்கு விதிகளின் கீழ் உப பிரிவில் விபரிக்கப்படுகின்ற "கந்தவுற துல" எல்லையில் அமுலாகும்.

நிரோசா எஸ். கமகே,
பிரதேச செயலாளர்,
அதுரலிய.

பிரதேச செயலகம்,
அதுரலிய,
2018, திசெம்பர் 11.

12-965

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2018, ஒற்றோபர் 30 ஆந்தேதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

"கடன்பெறுநரான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியாகவுள்ளதும் (PV 96647) ஆம் இலக்கத்தைக் கொண்டதும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை மாலபேயில் கொண்டுள்ளதுமான தீபிக்கா மைக்ரோ கிரெடிட் (பிறைவேட்) லிமிற்றெற் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் (வங்கி) நிறைவேற்றப்பட்ட கொழும்பைச் சோந்த பிரசித்த நொத்தாரிசு எச்.எம்.ஜீ.திசாநாயக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.05.08 ஆந் தேதிய 1411 ஆம் இலக்க முறிமூலம் ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப் பட்டனவும் இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டனவுமான ஆதனங்களினதும் வளவுகளின தும் பிணைப்பொறுப்புக்கெதிராக வழங்கப்பட்ட கடன்களின் மீது / வசதிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறிவுள்ளதாதலாலும்.

அத்துடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரராகவுள்ள அங்கொடையைச் சேர்ந்த மஹாமரக்கலலாகே அசங்க்க மஞ்ஜுல வீரசூரிய என்பவர் கடன்பெறுநரின் மீது நியாயமான அக்கறை கொண்டுள்ளவராகச் சொல்லப்பட்ட முறியின்கீழ் தமது இறையிலி உரிமையையும் உரித்தையும் அக்கறையையும் வங்கிக்கு ஈடுவைத்துள்ளாராதலாலும்.

அத்துடன் 2018, ஒகத்து 31 ஆந் தேதியன்றுள்ளவாறாக நூற்று ஐந்து மில்லியன் நாநூற்றி பதினாறாயிரத்தி எழு நூற்றி மூன்று ரூபா எட்டு சதம் (ரூ. 105,416,703.08) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்டகடன்களைமீள அறவிடுதல்(விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு சொல்லப்பட்ட முறியினால் சொல்லப்பட்ட கடன்களுக்கான / வசதிகளுக்கான பிணைப் பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனங்களும் வளவுகளும் அவ்வாதனங் களுக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை உரித்து மற்றும் அக்கறையுட்பட நூற்றி ஐந்து மில்லியன் நாநூற்று பதினாறாயிரத்தி எழு நூற்றி மூன்று ரூபா எட்டு சதம் (ரூ. 105,416,703.08) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் சொல்லப்பட்ட முறிமூலம் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான தொண்ணூற்றாறு மில்லியன் எழுநூற்றிப் பதினான்காயிரத்து ஐந்நூற்றிப் பதினைந்து ரூபா (ரூ. 96,714,515.00) கொண்ட முதல் தொகைமீது 2018, செத்தெம்பர் 1 ஆந் நாளிலிருந்து விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்குப் பதினெட்டு தசம் ஐந்து சதவீத (18.5%) வட்டியையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்)

அவற்றைக் கழித்து முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யு ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவில் கடவத் சத்தர கோறளையில் உயன்வத்தக் கிராமத்தில் அமைந்துள்ளதும் "பஜ்ஜமாகேவத்த" எனவழைக்கப்படும் காணியினதாய் 28A என்னும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், மண் மற்றும் வேறெல்லாவற்றுடனும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜே. டி சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1964.09.24 ஆந் தேதிய 1640 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் B எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கிலும், வடமேற்கிலும் மேற்கிலும் : அளுத் மாவத்தை ; தென்கிழக்கு : அதேகாணியின் காணித்துண்டம் A. பரப்பளவில் இது பத்தொன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 19.25பே.) கொண்டுள்ளதுடன் மாத்தறைக் காணிப்பதிவகத்தில் A 699/70 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எல். கே. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.01.28 ஆந் தேதிய 7333 ஆம் இலக்க அண்மைய நில அளவை வரைபடத்தின்படி மேற்கூறப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது.

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் கடவத் சத்தர கோறளையில் 417G உயன்வத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள்ளும் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் உயன்வத்த கிராமத்தில் அமைந்துள்ளதும் "பஜ்ஜமாகேவத்த" எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் எல். கே. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.01.28 ஆந் தேதிய 7333 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : மாநகரசபை வீதி; கிழக்கு : மாநகரசபை வீதி ஜயமினி ஹொரவெல மற்றும் பீ.எச். எஸ். ரத்நாயக்கவினால் உரிமைகோரப்பட்ட காணி; தெற்கு : ஜயமினி ஹொரவெல பீ.எச். எஸ். ரத்நாயக்க என்போரினால் உரிமைகோரப்பட்ட காணியும்; மாநகரசபை வீதியும் ; மேற்கு: மாநகரசபை வீதி. பரப்பளவில் இது அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள் மண் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பதினெட்டுத் தசம் நான்கு நான்கு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. பே18.44) கொண்டுள்ளது.

சாதனத்துடன் மின்சார வழங்கல் முறைமை நீர்வழங்கல் முறைமைச் சாதனம் தொலைத்தொடர்புச் சாதனம் மற்றும் காற்றுச்சீராக்கற் சாதனம் உட்பட மேலே மேலும் முழுமையாக குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுடன் இப்போது இணைக்கப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட அல்லது இதன்பின்னர் காலத்துக்குக்காலம் நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய அல்லது பொருத்தப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும் சாதனம் பொருத்திகள் இணைப்புக்கள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் அவை தனித்தனியாகவும்.

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

12-729

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2018.11.27 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :

"1. பிரசித்த நொத்தாரிசு திரு. ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2015.07.06 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல.3559 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2015.03.06 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3367 ஆகியவற்றின் பேரில் வென்னப்புவை, சிலாபம் வீதியில் அமைந்த திருவாளர்கள் சந்திரிகா வெடிங் ஸ்டூடியோ அன்ட் டிஜிற்றல் கலர் லெப் (பிரைவேற்) லிமிட்டெற்றிடமிருந்து (பணிப்பாளர்கள் வென்னப்புவ, தும்மலதெனிய மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. அபேசேகர வண்ணக்கு ஆரச்சிகே தொன் அநுர நிஷாந்த குமார அபேசேகர அல்லது வண்ணக்கு ஆரச்சிகே தொன் அநுர நிஷாந்த குமார் மற்றும் திருமதி மாசேவ்கே மேரியன் சாப்பா சஞ்ஜீவனி பெர்ணாண்டோ ஆகியோரிடமிருந்து கடன் வசதி 1 மீது முதலும் 2018.10.12 ஆந் திகதி வரை வட்டியும் ஏழு மில்லியன் நாநூற்று எழுபத்தொரு ஆயிரத்தி எழுநூற்றி இருபத்தொன்பது ரூபா ஏழு சதம் (ரூபா 7,471,729.07), மூன்று மில்லியன் ஐநூற்று நாற்பத்தி நான்காயிரத்தி இருநூற்றி அறுபத்திரண்டு ரூபா இருபத்துநான்கு சதம் (ரூபா 3,544,262.24) அத்துடன் கடன் வசதி தீர்க்காத முதல் ஏழு மில்லியன் அறுபத்தி மூவாயிரத்தி எண்ணூற்றி நாற்பத்தி நான்கு ரூபா முப்பத்திரெண்டு சதம் (ரூபா 7,063,844.32) மீது ஆண்டுக்கு எட்டு (8%) வீதத்தில் 2018.10.13 ஆந் திகதி தொடக்கம் மேலும் வட்டியும், மீள் கட்டமைப்புக்கடன் வசதி தீர்க்காத மூலதனம் மூன்று மில்லியன் முந்நூற்றி முப்பத்திரெண்டாயிரத்தி தொளாயிரத்தி ஐந்து ரூபா முப்பத்தாறு சதம் (ரூபா

3,332,905.36) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2018.10.13 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் மேலும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்:

2. பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்கா அத்தாட்சிப்படுத்திய 2015.07.06 ஆந் திகதியிட்ட ஈடுடுமுறி இல. 3559 இன் பேரில் மேற்குறிப்பிட்ட இரண்டு கடன் வசதிகளுக்காக வருமதியாக உள்ள பதினொரு மில்லியன் பதினைந்தாயிரத்தி தொள்ளாயிரத்து தொண்ணூற்றொரு ரூபா முப்பத்தொரு சதம் (ரூபா 11,015,991.31) அத்துடன் 2018.10.13 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) அதன் தித்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ மற்றும் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரத் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, வென்னப்புவ கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோரளை தெற்கு கம்மல்பற்றுவில் வென்னப்புவ பிரதேசசபை எல்லைகளில் வென்னப்புவ பிரதேச செயலகப்பிரிவில் உல்ஹிட்டியாவ கிராம அலுவலர் பிரிவில் உல்ஹிட்டியாவயில் அமைந்த அம்பகஹவத்த அல்லது போகஹவத்த என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் வை. எம். ஆர். யாப்பா தயாரித்த 1996.03.16 ஆந் திகதியிட்ட வரைபட இல. 4806 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : ஜவன் பெர்ணாண்டோவின் அதே காணியின் மீதிப்பாகமும்; கிழக்கு : சிலாபத்திலிருந்து கொழும்பு வரை பெருந்தெருவும்; தெற்கு: துண்டு 2 உம்; மேற்கு: ஜவன் பெர்ணாண்டோவின் அதே காணியின் மீதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்டு பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது மாரவில காணிப்பதிவகத்தில் G120/239 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்காக உள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

ஜீ. என். ஏ. செனவிரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வென்னப்புவ.

12-914

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394(3) ஆம் பிரிவின் கீழான "ஆசிரி பேர்னிச்சர் டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2009.08.07 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஆசிரி பேர்னிச்சர் டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்"எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ஆசிரி பேர்னிச்சர் டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்" எனும் பெயர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 68726
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2018, நவெம்பர் 29.

12-702

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2018, ஒற்றோபர் 30 ஆந் தேதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது :

"(கடன்பெறுநர்களான) 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும் (பீவீ 122735 ஆம் இலக்கத்தைக் கொண்டதும்) மாலபேயில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான

கிறீன் விலா வீஜபீ கெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும் (பீவீ 96647 ஆம் இலக்கத்தைக் கொண்டதும்) மாலபேயில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான தீபிக்கா மைக்ரோ கிரெடிட் (பிறைவேட்) லிமிடெட், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ (வங்கி) சார்பில் நிறைவேற்றப்பட்டு பிரசித்த நொத்தாரிசு திருவாட்டி டபிள்யூ. எச். இனோக்கா மல்காந்தி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.02 ஆந் திகதிய 958 ஆம் இலக்க முறிமீது ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்டனவும் இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டனவுமான ஆதனங்களினதும் வளவுகளினதும் பிணைப்பொறுப்புக்கெதிராக வழங்கப் பட்ட கடன்களின்/ வசதிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளன வாதலாலும்.

அத்துடன் கிறீன் விலா வீஜபீ கெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட், கடன்பெறுநர்களின்மீது நியாயமான அக்கறையைக் கொண்டிருந்து கீழே விவரிக்கப்பட்ட ஆதனங்களினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரராகவிருப்பத னால், சொல்லப்பட்ட முறியின்கீழ் தமது இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறையை வங்கிக்கு ஈடுவைத்துள்ளதாதலாலும்.

அத்துடன் 2018, ஓகத்து 31 ஆந்தேதியன்றுள்ளவாறாக ஐம்பத்தொன்பது மில்லியன் நூற்றிப் பன்னிரெண்டாயிரத்து நாநூற்றித்தொண்ணூற்றெட்டு ரூபா இருபத்திமூன்று சதம் (ரூ. 59,112,498.23) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட ஐம்பத்தொன்பது மில்லியன் நூற்றிப் பன்னிரெண்டாயிரத்தி நானூற்றித்தொண்ணூற்றெட்டு ரூபா இருபத்திமூன்று சதம் (ரூ. 59,112,498.23) கொண்ட தொகையையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறியினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட முறியின் விடயத்தில் வங்கிக்கு வருமதியாகவுள்ளதுமான ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா (ரூ. 55,000,000.00) கொண்ட முதல் தொகைமீது 2018, செத்தெம்பர் 1 ஆந்நாளிலிருந்து விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்குப் பதினேழு சதவீத (17%) வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட கடன்களுக்கான/ வசதிகளுக்கான பிணைப்பொறுப்பாக சொல்லப்பட்ட முறிமூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனங்களும் வளவுகளும், அவ்வாதனங்களுக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை உரித்து அத்துடன் அக்கறையுட்பட உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

01. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் தலங்கம வடக்கு B இன் 477A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் கடுவெல மாநகர சபை எல்லைகளினுள் தலங்கமவில் கடுவெல வீதி மற்றும் தலஹேன வீதிவழியாக அமைந்துள்ளதும் 639/ 10 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் 2017, ஓகத்து 01 ஆந் திகதியன்று உரிமம்பெற்ற நில அளவையாளர் சாலிய விக்ரமசிங்க என்பவரினால் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் A1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 16 மற்றும் 3253 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4; கிழக்கு : நுககஹாவத்த மற்றும் 14121 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A2 (குறித்துக்காட்டப்பட்டது); தெற்கு : கடுவெல வீதியில் 738 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகள், 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 19 இன் எஞ்சியுள்ள பாகம் மற்றும் 14121 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் A2 (குறித்துக்காட்டப்பட்டது) ; மேற்கு : 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 14, 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 19 இன் எஞ்சியுள்ள பாகம், 14121 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் A2 (குறித்துக்காட்டப்பட்டது), மற்றும் 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 13 மற்றும் 16. பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 14121 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் தசம் ஆறு மூன்று பேர்ச் (0ஏ. 1றூ. 0.63பே.) அல்லது 0.1028 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது.

02. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் தலங்கம வடக்கு B இன் 477A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் கடுவெல மாநகர சபை எல்லைகளினுள் தலங்கமவில் கடுவெல வீதி மற்றும் தலஹேன வீதிவழியாக அமைந்துள்ளதும் 639/ 10 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த

எனவழைக்கப்படும் காணியினதாய் 2017, ஓகத்து 01 ஆந் தேதியன்று உரிமம்பெற்ற நில அளவையாளர் சாலிய விக்ரமசிங்க என்பவரினால் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A2 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் A2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : 14121 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A1 (குறித்துக்காட்டப்பட்டது); கிழக்கு : 14121 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A1 (குறித்துக்காட்டப்பட்டது); தெற்கு : 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 19 இன் எஞ்சியுள்ள பாகம்; மேற்கு : 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 14, 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 19 இன் எஞ்சியுள்ள பாகம், 14121 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் A1 (குறித்துக்காட்டப்பட்டது). பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 14121 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்று தசம் ஒன்பது இரண்டு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 01.92பே.) அல்லது 0.0048 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது.

சொல்லப்பட்ட காணித்துண்டங்கள் A1 மற்றும் A2 இதன்கண் கீழே விவரிக்கப்பட்ட காணியின் மீள்நிலஅளவையாகவும் உட்பிரிவிடுகைகளாகவும் உள்ளன:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் தலங்கம வடக்கு B இன் 477A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் கடுவெல மாநகர சபை எல்லைகளினுள் தலங்கமவில் கடுவெல வீதி மற்றும் தலஹேன வீதிவழியாக அமைந்துள்ளதும் 639/10 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் சாலிய விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016, மார்ச்சு 29 ஆந்தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 15, 17, 18, 20 என்பவற்றினதும் காணித்துண்டம் 19 இன் பாகத்தினதும் (செல்வழியுரிமை) மீள்நில அளவையாகவும் ஒன்று சேர்க்கையாகவும் உள்ளதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் சாலிய விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016, மாச்சு 29 ஆந்தேதிய 14121 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித் துண்டம் A எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் A பின்வரும் எல்லைகளை யுடையது - வடக்கு : 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 16 மற்றும் 3253 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4; கிழக்கு : நுககஹாவத்த; தெற்கு : கடுவெல வீதியில் 738 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகள் மற்றும் வீதி (3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 19 இன் எஞ்சியுள்ள பாகங்கள்) ; மேற்கு: காணித்துண்டங்கள் 14, 13 (வீதி) மற்றும் 3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 16 மற்றும் வீதி (3273 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 19 இன் எஞ்சியுள்ள பாகங்கள்). பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 14121 ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்மீதுள்ளவையும் அல்லது அதனோடிணைந்துள்ளவையுமான மண், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ஒரு றூட் இரண்டு தசம் ஐந்து ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 1றூ. 2.55பே.) அல்லது 0.1076 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது.

சொல்லப்பட்ட காணித்துண்டம் A இதன்கண் கீழே விவரிக்கப்பட்ட காணிகளின் ஒன்றுசேர்க்கையாகவும் மீள்நிலஅளவையாகவும் உள்ளது:

01. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவின் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல உப அலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் கடுவெல வீதியில் 631, 633 மற்றும் 639 ஆம் (பாகம்) வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய்உரிமம்பெற்றநிலஅளவையாளர்ஏ.ஈ.விஜேசூரிய என்ப வரினால் தயாரிக்கப்பட்ட 1990, நவெம்பர் 24 ஆந் தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 15 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 15 பின்வரும் எல்லைகளையுடையது -வடக்கு : காணித்துண்டம் 16; கிழக்கு: காணித்துண்டங்கள் 17 மற்றும் 19 (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்); தெற்கு : காணித்துண்டம் 19 (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) மற்றும் மேற்கு : காணித்துண்டம் 13 (20 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்): பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3273 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினொன்று தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 11.25பே.) அல்லது 0.0285 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப்பதிவகத்தில் உரித்தின்கீழ் தொகுதி G 1072 பக்கம் 128 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

02. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல உப அலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் கடுவெல வீதியில் 633 ஆம் (பாகம்) வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990, நவெம்பர் 24 ஆந்தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 17 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 17 பின்வரும் எல்லைகளை யுடையது - வடக்கு : 3253 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4; கிழக்கு : நுககஹாவத்த ; தெற்கு : காணித்துண்டம் 18 மற்றும் மேற்கு : காணித்துண்டங்கள் 15 மற்றும் 19 (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்):

பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3273 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் இரண்டு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 09.24 பே.) அல்லது 0.0233 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப்பதிவகத்தில் உரித்தின்கீழ் தொகுதி G 1408 பக்கம் 123 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

03. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல உபஅலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் கடுவெல வீதியில் 631, 633 மற்றும் 639 ஆம் (பாகம்)வரிமதிப்பீட்டிலக்கங்களைக்கொண்டதும்போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990 நவெம்பர் 24 ஆந்தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 18 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 18 பின்வரும் எல்லை களையுடையது - வடக்கு : காணித்துண்டம் 17 ; கிழக்கு: நுககஹாவத்த; தெற்கு : காணித்துண்டம் 20 மற்றும் மேற்கு: காணித்துண்டம் 19 (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்): பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3273 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது தசம் ஏழு பூச்சியம் பேர்ச் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 09.70பே.) கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப்பதிவகத்தின் உரித்தின்கீழ் தொகுதி G 1046 பக்கம் 74 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

04. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல உபஅலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் கடுவெல வீதியில் 631, 633 மற்றும் 639 ஆம் (பாகம்)வரிமதிப்பீட்டிலக்கங்களைக்கொண்டதும்போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990, நவெம்பர் 24 ஆந் தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 20 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 20 பின்வரும் எல்லை களையுடையது - வடக்கு : காணித்துண்டம் 18; கிழக்கு: நுககஹாவத்த ; தெற்கு : கடுவெல வீதியில் 738 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்ட டப்லிவ். டீ. சரத்சந்திரவின் காணி மற்றும் மேற்கு : காணித்துண்டங்கள் 14 மற்றும் 19 (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்): பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3273 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்துத் தசம் நான்கு நான்கு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 10.44பே.) அல்லது 0.0264 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப்பதிவகத்தில் உரித்தின்கீழ் தொகுதி G 1072 பக்கம் 129 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

பின்வரும் காணிகளின்மீதும் அவைநெடுகிலும் செல் வழியுரிமைகளைப் பயன்படுத்துவதற்கான உரிமையுடன் சேர்த்து :-

01. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல உப அலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் கடுவெல வீதியில் 631, 633 மற்றும் 639 ஆம் (பாகம்) வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990, நவெம்பர் 24 ஆந் தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 19 (வீதிக்கான ஒதுக்கிடம்) எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 19 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டம் 15; கிழக்கு : காணித்துண்டங்கள் 17, 18 மற்றும் 20 ; தெற்கு : காணித்துண்டம் 14 மற்றும் மேற்கு : காணித்துண்டங்கள் 14, 13 (20 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்): பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3273 ஆம் இலக்க வரைபடத்தின்படி நான்கு தசம் ஏழு நான்கு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 04.74பே.) அல்லது 0.0119 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப்பதிவகத்தில் உரித்தின்கீழ் தொகுதி G 1363 பக்கம் 143 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

02. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல உபஅலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் கடுவெல வீதியில் 631, 633 மற்றும் 639 ஆம் (பாகம்) வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப் படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990, நவெம்பர் 24 ஆந்தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 13 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட துமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 13 (வீதிக்கான ஒதுக்கிடம்) பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : 1346 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ஏ, (20 அடி அகலமான வீதி ஒதுக்கிடம்); கிழக்கு : காணித்துண்டங்கள் 14, 15, 16 மற்றும் 19 (வீதிக்கான ஒதுக்கிடம்) மற்றும் கடுவெல வீதியில்738 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்ட டப்லிவ். டீ. சரத்சந்திரவின் காணி; தெற்கு : 3253ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 மற்றும் மேற்கு : காணித்துண்டங்கள் 2, 3, 21 (வீதிக்கான ஒதுக்கிடம்) 5, 6 மற்றும் 12: பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3273 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தொன்று தசம் இரண்டு மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 21.23பே.) அல்லது 0.0531 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப்பதிவகத்தில் உரித்தின்கீழ் தொகுதி G 1429 பக்கம் 239 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

03. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின்

பத்தரமுல்ல உபஅலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் கடுவெல வீதியில் 631, 633 மற்றும் 639 ஆம் (பாகம்) வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் போகஹாலந்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990, நவெம்பர் 24 ஆந் தேதிய 3273 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 21 (வீதிக்கான ஒதுக்கிடம்) எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 21 (வீதிக்கான ஒதுக்கிடம்) பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டங்கள் 03 மற்றும் 04; கிழக்கு : காணித்துண்டம் 13 (20 அடி அகலமான வீதி ஒதுக்கிடம்); தெற்கு : காணித்துண்டம் 5 மற்றும் மேற்கு : காணித்துண்டம் 7. பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3273 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 02.50பே.) கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப்பதிவகத்தில் உரித்தின்கீழ் தொகுதி G 1002 பக்கம் 109 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

04. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையின் பத்தரமுல்ல உபஅலுவலகத்தினுள் தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் இன்னமும் சரியாக போகஹாவத்த மற்றும் குருந்துகஹாவத்த எனவழைக்கப்படும் போகஹாவத்த மற்றும் குருந்துவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1968 மே 8 ஆந்தேதிய 1346 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் ஏ எனவடையாளமிடப்பட்டதும் (20 அடி அகலமான தனியார் வீதி) பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் : சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : சொல்லப்பட்ட 1346 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 1 முதல் 6 வரை; கிழக்கு : சொல்லப்பட்ட 1346 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7; தெற்கு : சொல்லப்பட்ட 3253 ஆம் இலக்க வரைபடத்தில் இப்போது காணித்துண்டம் 4 லாகவுள்ள அதேகாணியின் மீதி இடப்பரப்பு மற்றும் ; மேற்கு : வீதிப் பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1346 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்திநான்கு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 24பே.) கொண்டுள்ளது. (ஹோமாகமக் காணிப் பதிவகத்தில் உரித்தின்கீழ் தொகுதி G 1308 பக்கம் 216 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

11 - 728

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2018.11.27 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"1. பிரசித்த நொத்தாரிசு ஆர். சீ. கே. ஜயவீர அத்தாட்சிப்படுத்திய 2015.06.23 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 40, பிரசித்த நொத்தாரிசு கே. டீ. சுமணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2017.11.06 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 187 மற்றும் பிரசித்த நொத்தாரிசு இந்திக பீ. ஜயதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2018.01.26 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 9911 ஆகியவற்றின் பேரில் கலேகெதர, தம்பதெனிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. லியன ஆரச்சிலாகே இந்துனில் பண்டார லியனாராச்சி என்பவரிடமிருந்து மீள் அட்டவணைக்கடன் வசதி A மீது 2018.10.03 ஆந் திகதி வரை முதலும் வட்டியும் இரண்டு மில்லியன் நூற்றி அறுபத்தெட்டு ஆயிரத்தி எழுநூறு ரூபா எழுபத்தி மூன்று சதம் (ரூபா 2,168,700.73), மீள் அட்டவணைக்கடன் வசதி B ஒரு மில்லியன் இருநூற்று இருபத்துமூவாயிரத்தி முந்நூற்றி எண்பத்தொரு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 1,223,391.79) நிரந்தர மேலதிகப்பற்று வகுதிமீது நான்கு மில்லியன் அறுபத்து நான்கு ஆயிரத்து நூற்றி எழுபத்தொரு ரூபா இருபத்தேழு சதம் (ரூபா 4,064,171.27) அத்துடன் மீள் அட்டவணைக்கடன் வசதி A தீர்க்காத மூலதனம் ஒரு மில்லியன் தொள்ளாயிரத்தி எண்பது ஆயிரம் ரூபாவில் (ரூபா 1,980,000.00) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2018.10.04 ஆந் திகதி தொடக்கம் மேலும் வட்டியும், மீள் அட்டவணைக்கடன் வசதி B தீர்க்காத மூலதனம் ஒரு மில்லியன் நூற்றுத் தொண்ணூறாயிரம் ரூபாவில் (ரூபா 1,190,000.00) ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2018.10.04 ஆந் திகதி தொடக்கம் மேலும் வட்டியும், மேலதிகப்பற்று வசதி தீர்க்காத மூலதனம் நான்கு மில்லியன் ரூபாவில் (ரூபா 4,000,000.00) ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்தில் 2018.10.04 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. பிரசித்த நொத்தாரிசு ஆர். சீ. கே. ஜயவீர அத்தாட்சிப்படுத்திய 2015.06.23 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 40, பிரசித்த நொத்தாரிசு கே. டீ. சுமணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2017.11.06 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 187 மற்றும் பிரசித்த நொத்தாரிசு இந்திக பீ. ஜயதிலக அத்தாட்சிப்படுத்திய 2018.01.26 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 9911 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு கடன் வசதிகள் மற்றும் மேலதிகப்பற்று வசதிக்காக வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஏழு மில்லியன் நாநூற்று ஐம்பத்தாறு

ஆயிரத்தி இருநூற்றி ஐம்பத்தி மூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 7,456,253.79) அத்துடன் 2018.10.04 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈட்டுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவுக்கமைய (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித் கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, கிரிஉல்ல கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.”.

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம் கட்டுகம்பொல ஹத்பற்று மெதபற்று கோரளையில் பன்னல பிரதேசசபை எல்லைகளுள் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் கௌதுமுன்ன கிராம அலுவலர் பிரிவு இல.1561 இல் கௌதுமுன்ன மற்றும் கன்னிமுல்ல கிராமங்களில் அமைந்த “கதுருகஹ வத்தயின் பாகம் கதுருகொள்ள மீகஹஹேன, மாதங்கஹ கொட்டுவே பில்லேவ வத்த, கூன்கஹமுலஹேன மற்றும் கதுருகொல்லே வத்த” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. ஏ. என். குணசிறி தயாரித்த 2007.03.25 ஆந் திகதியிட்ட வரைபட இல. 5109 இல் விபரித்த துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : சுபசிங்ஹ அப்புஹாமியின் காணியும்; கிழக்கு : சுபசிங்ஹ அப்புஹாமியின் காணியும்; தெற்கு : கௌதுமுன்னயிலிருந்து தம்பதெனிய வரை பிரதான பாதையும்; மேற்கு: கே. எம். திலக்கரத்னவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 39.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது . குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் E96/84 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணி கிழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம் கட்டுகம்பொல ஹத்பற்று மெதப்பற்று கோரளையில் பன்னல பிரதேசசபை எல்லைகளுள் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் கௌதுமுன்ன கிராம அலுவலர் பிரிவு இல. 1561 இல் கௌதுமுன்ன மற்றும் கன்னிமுல்ல கிராமங்களில் அமைந்த “கதுருகஹ வத்தயின் பாகம், கதுருகொள்ள மீகஹஹேன, மாதங்கொட்டுவே பில்லேவ வத்த, கூன்கஹமுலஹேன வத்த” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. கே.தென்னகெதர தயாரித்த 1983.06.08 ஆந்திகதியிட்ட வரைபட இல. 321/ 83 இல் விபரித்த துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: அப்புஹாமிக்குச் சொந்தமான காணியும்; கிழக்கு: அப்புஹாமிக்குச் சொந்தமான காணியும்; தெற்கு: கட்டுகம்பொல தம்பதெனிய பாதையும்; மேற்கு: கே. எம். திலக்கரத்னவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (00ஏ. 01றூ. 00பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

2. வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டம் கட்டுகம்பொல ஹத்பற்று மெதபற்று கோரளையில் பன்னல பிரதேசசபை எல்லைகளுள் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் கௌதுமுன்ன கிராம அலுவலர் பிரிவு இல. 1561 இல் கௌதுமுன்ன மற்றும் கன்னிமுல்ல கிராமங்களில் அமைந்த “கதுருகஹ வத்தயின் பாகம், கதுருகொள்ள மீகஹஹேன, மாதங்கஹகொட்டுவே பில்லேவ வத்த, கூன்கஹமுலஹேன வத்த” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. ஏ. என். குணசிறி தயாரித்த 2007.03.25 ஆந் திகதியிட்ட வரைபட இல. 5109 இல் விபரித்த துண்டு 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித் துண்டு - வடக்கு: கடுமுன்னயிலிருந்து தம்பதெனிய வரை பிரதான பாதையும்; கிழக்கு: கே. எம். திலக்கரத்ன மற்றும் ஏனையோரின் நெல்வயலும், பாடசாலைக்காக ஒதுக்கிய காணியும், கே. எம். கருணாதிலக்கவின் காணியும்; தெற்கு: கே. எம். கருணாதிலக்கவின் காணியும்; மேற்கு : பாதையும் (பீ. ச.) எல்லைகளாகக் கொண்டு மூன்று ஏக்கர் மூன்று றூட் முப்பத்திரெண்டு தசம் இரண்டு பேர்ச்சுகள் (03ஏ. 03றூ. 32.2பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் L225/226 இல் பதிவுசெய்து E96/84A வரை கொண்டு செல்லப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி. எஸ். பீ. என். எஸ். பதிரன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கிரிஉல்ல.

12-915

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2018.11.27 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

“1. பிரசித்த நொத்தாரிசு திருமதி எஸ். ஏ. டீ. எஸ். கே. அத்துகோரல அத்தாட்சிப்படுத்திய 2014.12.31 ஆந்

திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1653 ஆம் மற்றும் 2016.09.26 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2187 ஆகியவற்றின் பேரில் தொடம்பே கொரகஉல, இல. 482/A என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி ஒவிட்டிகேவத்த முதலிஹாமிலாகே தினூஷ லக்மாலி மற்றும் திரு. மத்தும ஹெட்டி விதானலாகே துஷார இந்திக வீரசிங்ஹ ஆகியோரிடமிருந்து 2018.11.05 ஆந் திகதி வரை முதலும் வட்டியும் எட்டு மில்லியன் ஐநூற்று எண்பத்தொன்பது ஆயிரத்தி எழுநூற்றி ஐம்பத்தாறு ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூபா 8,589,756.91) அத்துடன் 1 ஆவது கடன் மீது நான்கு மில்லியன் எழுநூற்றி நாற்பத்து நான்காயிரத்தி ஐநூற்றி இருபத்தெட்டு ரூபா ஒன்பது சதங்களில் (ரூபா 4,744,528.09) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2018.11.06 ஆந் திகதி தொடக்கம் வட்டியும், 2 ஆவது கடன் மீது இரண்டு மில்லியன் நூற்றி ஏழாயிரத்து தொளாயிரத்தி நாற்பத்தெட்டு ரூபா தொண்ணூற்றிரெண்டு சதங்களில் (ரூபா 2,107,948.92) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2018.11.06 ஆந் தொடக்கம் வட்டியும், அத்துடன் நிரந்தர மேலதிகப்பற்று வசதி (POD) ஒரு மில்லியன் ரூபாய்கள் (ரூபா 1,000,000.00) மீது ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்தில் 2018.11.06 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. பிரசித்த நொத்தாரிசு திருமதி எஸ். ஏ. டீ. எஸ். கே. அத்துகோரல அத்தாட்சிப்படுத்திய 2014.12.31 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1653 ஆம் மற்றும் 2016.09.26 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2187 ஆம் ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட எட்டு மில்லியன் ஐநூற்று எண்பத்தொன்பது ஆயிரத்தி எழுநூற்றி ஐம்பத்தாறு ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூபா 8,589,756.91) அத்துடன் 2018.11.06 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஏலநிறுவனத்தின் ஏலதாரருக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, அயகம கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.”

### அட்டவணை

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்டி கோரளை உடபற்று தெற்கில் குருவிட்ட பிரதேச சபை எல்லைகளுள் கிரிஎல்ல பிரதேச செயலகப்பிரிவில் தொடம்பே மேற்கு கிராம அலுவலர் பிரிவு இல. 150/A இல் தொடம்பே கிராமத்தில் அமைந்த “தபஸ்ரக்கஹேன அல்லது ஜாவாரக்கஹேன” என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஈ. ஏ. போபதீர தயாரித்த 1999.05.13 ஆந் திகதியிட்ட வரைபட இல. 935 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : புஹெராயும்; கிழக்கு : விதானகே ஹேனயும்; தெற்கு: பிரதான பாதையும்; மேற்கு : எப். எனசல் மண்டியஹேனயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தைந்து தசம் எட்டு பேர்ச்சுகள் (01ஏ. 02றூ. 35.8பே.) அல்லது ஹெக்டேயர்கள் பூச்சியம் தசம் ஆறு ஒன்பது ஏழு ஆறு (ஹெக்டெயர்கள் 0.6976) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் J19/89 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. டீ. ஏ. யூ. ரத்நாயக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அயகம,
2018, திசெம்பர் 03.

12-916

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2018.10.17 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

“1. பிரசித்த நொத்தாரிசு எச். பீ. எஸ். எம். விஜேவர்தன அத்தாட்சிப்படுத்திய 2015.05.14 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 217 இன் பேரில் திரு. குருகலசூரிய விடியன்குமார் பெர்ணான்டோ மற்றும் திருமதி குருகுலசூரிய மாரி அச்சலா நிரோஷனி பெர்ணாண்டோ ஆகியோரிடமிருந்து கடன் மீது 2018.10.01 ஆந் திகதி வரை முதலும் வட்டியும் ஏழு மில்லியன் தொளாயிரத்து எழுபத்தி இரண்டாயிரத்தி இருநூற்றி அறுபத்திரெண்டு ரூபா ஒரு சதமும் (ரூபா 7,972,262.01) அத்துடன் ஆறு மில்லியன் தொள்ளாயிரத்தி ஐம்பத்தேழு ஆயிரத்தி ஐநூற்றி முபத்திரெண்டு ரூபா தொண்ணூற்றாறு சதங்களில் ரூபா 6,957,532.96) ஆண்டுக்கு பதிநான்கு தசம் மூன்று மூன்று (14.33%) வீதத்தில் 2018.10.02 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. 2015.05.14 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி இல. 217 இன் பேரில் கடன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஏழு மில்லியன் தொளாயிரத்து எழுபத்தி இரண்டாயிரத்தி இருநூற்றி அறுபத்திரண்டு ரூபா ஒரு சதமும் (ரூபா 7,972,262.01) அத்துடன் 2018.10.02 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, நீர்கொழும்புக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு மாநகரசபை எல்லைகளுள் நீர்கொழும்பு பிரதேச செயலகம் மற்றும் முன்னக்கரய கிராம அலுவலர் பிரிவு இல. 156 இல் வோர்ட் இல. 1இல் முன்னக்கரயில் அமைந்த காலகோங்கஹவத்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. எச். ஈ. மெண்டிஸ் தயாரித்த 1988.12.04 ஆந் திகதியிட்ட வரைபட இல. 5803 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு – வடக்கு: சென்ட மார்ட்டின் பாதையும் (எனினும் பிழையாக சென்ட் மாரியா பாதை என பதிவுசெய்த); கிழக்கு : கென்ட் நிகொலஸ் பாதையும் (பிழையாக சென்ட் நிகுலா பாதை என பதிவுசெய்த); தெற்கு : இக்காணியின் துண்டு 2உம்; மேற்கு : கே. பீ. பெற்றிக் என்பவரின் காணியும் எல்லைகளாகக் கொண்ட மேற்குறிப்பிட்ட வரைபட இல. 5803 இன் படி ஐந்து பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 05பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் வளர்பவையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் G 26/77 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணி அண்மைய அளவையின் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வோர்ட் இல. 1 இல் முன்னக்கரயில் அமைந்த காலகோங்கஹவத்த என அழைக்கும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எஸ். எஸ். மெண்டிஸ் தயாரித்த 2011.03.19 ஆந் திகதியிட்ட வரைபட இல. 4753 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு – வடக்கு : சென்ட் மார்ட்டின்ஸ் பாதையும்; கிழக்கு : சென்ட் நிகொலஸ் பாதையும் (பிழையாக சென்ட் நிகுல பாதை என பதிவுசெய்த); தெற்கு : கே. ஜே. எல். பெர்ணான்டோவின் காணியும்; மேற்கு : ஏ. பீ. பெட்ரிக் என்பவரின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 4753 இன் படி ஐந்து பேர்ச்சுகள் (00ஏ. 00றூ. 05பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் வளர்பவையும் ஆகும்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி. டபிள்யூ. ஏ. பீ. என். பத்திரன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நீர்கொழும்பு நகரக் கிளை.

12-919

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

பன்னிப்பிட்டிய, கொட்டாவ ஹைலெவல் வீதி, இல. 360/1இல் அமைந்த செனாரோ மோட்டார் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்டின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த (1) மூன்று ஆதனங்கள் தலங்கம, விக்ரமசிங்ஹபுர வீதி மற்றும் பன்னிப்பிட்டிய வீதி, இல. 605 இல் அமைந்த ஆதனம், (2) ஹைலெவல் வீதி, கொட்டாவ நகரில் அமைந்த தெனியேவலஹேன அல்லது மில்லகஹகனத்தஹேன எனும் ஆதனம், (3) ஹைலெவல் வீதி, கொட்டாவ நகரில் அமைந்த அம்பகஹவத்த மற்றும் மதட்டியகஹவத்த எனும் ஆதனம்.

2018.10.17 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"1. பிரசித்த நொத்தாரிசு ஜே. சீ. மகாராச்சி அத்தாட்சிப்படுத்திய 2016.03.28 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 318 இன் பேரில் பன்னிபிட்டிய, கொட்டாவ ஹைலெவல் வீதி, இல. 360/1 என்னும் முகவரியைச் சேர்ந்த செனாரோ மோட்டார் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து முதலும் 2018.10.03 ஆந் திகதி வரை வட்டியும் தவணைக் கடன் III இன் மீது இருபத்திரண்டு கோடியே தொண்ணூற்றாறு இலட்சத்து தொண்ணூற்றுநான்காயிரத்து அறுநூற்றிரண்டு ரூபா அறுபத்துமூன்று சதமும் (ரூ. 22,96,94,602.63) மீள் அட்டவணைக் கடன் A1 மீது பதினான்கு கோடியே அறுபத்துமூன்று இலட்சத்து இருபத்தேழாயிரத்து அறுநூற்றறுபத்துநான்கு ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 14,63,27,664.25) மீள் அட்டவணைக் கடன் AII மீது ஒரு கோடியே எழுபத்தேழு இலட்சத்து அறுபத்துநான்காயிரத்து எழுபத்திரண்டு ரூபா பதினேழு சதம் (ரூ. 1,77,64,072.17)

அத்துடன் தவணைக் கடன் III இன் பதினாறு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 16,50,00,000.00) ஆண்டுக்கு பதினைந்து தசம் ஏழு எட்டு (15.78%) வீதத்தில் 2018.10.04 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஈ. கே. எச். எம். கருணாதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2012.03.16 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2684, பிரசித்த நொத்தாரிசு எஸ். ரீ. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2013.03.25 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 878 மற்றும் பிரசித்த நொத்தாரிசு என். ரீ. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2013.09.18 ஆந் திகதியிட்ட இல. 2346 ஆகியவற்றின் பேரில் மீள் அட்டவணைக் கடன் A1 பத்து கோடியே முப்பத்துநான்கு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முன்னூற்றைம்பது ரூபா (ரூ. 10,34,19,350.00) ஆண்டுக்கு பதினைந்து தசம் ஏழு எட்டு (15.78%) வீதத்தில் வட்டியும் மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஈ. கே. எச். எம். கருணாதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2009.12.18 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1030, பிரசித்த நொத்தாரிசு எஸ். ரீ. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2013.03.25 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 879 மற்றும் பிரசித்த நொத்தாரிசு என். ரீ. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2013.09.18 ஆந் திகதியிட்ட இல. 2347 ஆகியவற்றின் பேரில் மீள் அட்டவணைக் கடன் AII இன் ஒரு கோடியே இருபத்துநான்கு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து எண்ணூற்றறுபத்துமூன்று ரூபா (ரூ. 1,24,83,863.00) ஆண்டுக்கு பதினைந்து தசம் ஏழு எட்டு (15.78%) வீதத்தில் 2018.10.04 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இலக்கங்கள் 318, 2684, 878, 2346, 1030, 879 மற்றும் 2347 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட முப்பத்தொன்பது கோடியே முப்பத்தேழு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து முன்னூற்றுமுப்பத்தொன்பது ரூபா ஐந்து சதம் (ரூ. 39,37,86,339.05) அத்துடன் 2018.10.04 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். துசித்த கருணாரத்ன அவர்கள் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி (அறவிடல் தொகுதி), பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

**ஈட்டுமுறி இல. 318 இல் குறிப்பிட்ட அட்டவணை**

**முதலாவது அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பல்லேபற்றுவில் கடுவல மாநகர சபை எல்லைகளுள் பத்தரமுல்ல உப அலுவலக எல்லைகளுள் கடுவல பிரதேச செயலகம் மற்றும் ஆசிரி உயன கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 479B இல் தலங்கம விக்ரமசிங்ஹபுர வீதியில் அமைந்த பன்னிப்பிட்டிய வீதி வரிமதிப்பு இல. 605 (பாகம்) ஐக் கொண்ட ''பதுருதென, கொரககஹவத்த, கஹட்டகஹவத்த, கதுருவெடியதெனிய, கஹட்டகஹவத்த அல்லது கொரககஹவத்த மற்றும் அலுபோகஹவத்த'' என அழைக்கும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. ஏ. காவல்ஹோ தயாரித்த 2005.09.27 ஆந் திகதியிட்ட வரைபட இல. 5654 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : பன்னிபிட்டிய வீதி, வரிமதிப்பு இல. 599 ஐக் கொண்ட நிலமனையும் ; கிழக்கு : விக்ரமசிங்ஹபுர வீதி, வரிமதிப்பு இல. 17A ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கு : விக்ரமசிங்ஹபுர வீதியும் ; மேற்கு : துண்டு 1 மற்றும் 2 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் முப்பது தசம் ஆறு நான்கு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 30.648) அல்லது ஹெக்டெயர்கள் சைபர் தசம் ஒன்று ஏழு எட்டு ஆறு எட்டு (ஹெக்டெயர்கள் 0.17868) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் டீ814/ 34 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

தலங்கம தெற்கில் அமைந்த ''பதுருதென, கொரககஹவத்த, கஹட்டகஹவத்த, கதுருவெடியதெனிய, கஹட்டகஹவத்த அல்லது கொரககஹவத்த மற்றும் அலுபோகஹவத்த'' என அழைக்கும் காணி மேற்குறிப்பிட்ட வரைபட இல. 5654 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட (6 மீற்றர் அகலப்பாதை) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. ஆர். நாணயக்கார தயாரித்த 1984.03.02 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1090 இல் துண்டு 3Dயும் பன்னிப்பிட்டிய வீதி, வரிமதிப்பு இல. 599 ஐக் கொண்ட நிலமனையும் ; கிழக்கு : துண்டு 1 உம் ; தெற்கு: துண்டு 3 உம், பன்னிப்பிட்டிய வீதி வரிமதிப்பு இல. 603 ஐக் கொண்ட நிலமனையும் ; மேற்கு : பன்னிப்பிட்டிய வீதி வரிமதிப்பு இல. 603 ஐக் கொண்ட நிலமனையும், வரைபட இல. 1090 இல் துண்டு 3D உம் எல்லைகளாகக் கொண்டு நான்கு தசம் ஆறு ஆறு மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 4.663பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் B814/ 35 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தலங்கம தெற்கில் அமைந்த ''பதுருதென, கொரககஹவத்த, கஹட்டகஹவத்த, கதுருவெடியதெனிய, கஹட்டகஹவத்த அல்லது கொரககஹவத்த '' என அழைக்கும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. ஆர். நாணயக்கார தயாரித்த 1984.03.02 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1090 இல் துண்டு 3D என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு 2 உம் ; கிழக்கு : துண்டு 3 C உம் ; தெற்கு : துண்டு 3C உம் என். சலமன் பெரேராவின் வாரிசுகளின் காணியும் 2; மேற்கு : P. W. D. பாதையும் எல்லைகளாகக் கொண்டு நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் B814/36 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஈட்டுமுறி இல. 2684, 878 மற்றும் 2346 ஆகியவற்றில் குறிப்பிட்ட அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலகம் மற்றும் கொட்டாவ நகரம் கிராம அலுவலர் பிரிவு இல. 496 B இல் மஹரகம பிரதேச சபை எல்லைகளுள் சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் கொட்டாவயில் அமைந்த "தெனியேவலஹேன அல்லது மில்லகஹகனத்தஹேன, அலுபோகஹவத்த மற்றும் மதட்டியகஹவத்த தவட்டகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. கே. என். விக்ரமசிங்ஹ தயாரித்த 2003.08.25 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1673 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு: வரைபட இல. 1536 இல் விபரித்த துண்டு 2 உம் (12 அடி அகலப்பாதை) அதே காணியின் மீதிப்பாகமும் ; கிழக்கு : அதே காணியின் மீதிப்பாகமும் B. P. மொரவக்கயின் காணியும்; தெற்கு: B. P. மொரவக்கயின் காணியும் ஹைலெவல் வீதியும் ; மேற்கு: ஹைலெவல் வீதியும், வரைபட இல. 1536 இல் துண்டு 2 உம் (12 அடி அகலப் பாதை) எல்லைகளாகக் கொண்டு எட்டு தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 8.50பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் C 24/88 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட கொட்டாவயில் அமைந்த "தெனியேவல ஹேன அல்லது மில்லகஹகனத்தஹேன, அலுபோகஹவத்த மற்றும் மதட்டியகஹவத்த, தவட்டகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. கே. என். விக்ரமசிங்ஹ தயாரித்த 2003.01.03 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1688 இல் விபரித்த துண்டு 1-4 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : கோரலகே தர்மசேனவின் காணியும் ; கிழக்கு : எச். பத்மசிறியின் காணியும் ; தெற்கு : பாதையும் துண்டு 2 உம் ; மேற்கு : கே. ஏ. பெரேராவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் C 110/74 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

துண்டு 1-4 என அடையாளமிட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்டகொட்டாவயில்அமைந்த"தெனியேவலஹேன அல்லது மில்லகஹகனத்தஹேன, அலுபோகஹவத்த மற்றும் மதட்டியகஹவத்த அல்லது தவட்டகஹவத்த" என அழைக்கும் காணியின் துண்டு 1, 2, 3, 4 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : பன்னிப்பிட்டியவிலிருந்து கொட்டாவ வரை பழைய பாதையும், வரைபட இல. 1615 இல் துண்டு 1A உம் ; கிழக்கு : வரைபட இல. 3615 இல் துண்டுகள் 2 மற்றும் 5 உம் B. P. மொரவக்க என்பவருக்குச் சொந்தமான காணியும் வரைபட இல. 1673 இல் துண்டு 1 உம் வரைபட இல. 1536 இல் துண்டு 2 உம் (12 அடி அகலப்பாதை) ; மேற்கு : வரைபட இல. 1536 இல் துண்டு 1 உம் கே. டீ. சீ. ஜயதிலக்கவுக்குச் சொந்தமான ஆதனங்களும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் C 110/74 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**ஈட்டுமுறி இல. 1030, 879 மற்றும் 2347 ஆகியவற்றில் குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலகம் மற்றும் கொட்டாவ நகரம் கிராம அலுவலர் பிரிவு இல. 496 B இல் மஹரகம பட்டின சபை எல்லைகளுள் சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் கொட்டாவயில் அமைந்த "தெனியேவலஹேன அல்லது மில்லகஹகனத்தஹேன, அலுபோகஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் மேர்வின் சமரநாயக்கா தயாரித்த 2005.07.04 ஆந் திகதியிட்ட வரைபட இல. 9454 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : பழைய வீதியும் ; கிழக்கு : துண்டு D (10 அடி அகலப் பாதைக்கான ஒதுக்கம்) ; தெற்கு : துண்டு C உம் ; மேற்கு : வரைபட இல. 3651 இல் துண்டு 3 உம் (10 அடி பாதை) எல்லைகளாகக் கொண்டு பன்னிரெண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் C 1799/24 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதான முகாமையாளர்,
(அறவிடல்-தொகுதி).

இலங்கை வங்கி,
அறவிடல் தொகுதி பிரிவு,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

12-912

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி

(HDFC வங்கி)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம். 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டது.

பழைய கடன் இலக்கம் : 0807200015 ; புதிய கடன் இலக்கம் : 303725000004)

கடனாளியின் முழுப் பெயர் : திரு. மஞ்சுல நிஷேந்திர குணசீல ஜயவர்தன

"மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். கே. ஆர். டி. நாணயக்கார என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 264 ஆம் இலக்கத்தினையும் 2015.04.17

ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக்கொண்ட கடனை வங்கிக்கு மீளச் செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடகுப்பத்திரத்தின்படி, ஐம்பத்துமூன்று இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எழுநூற்றியிருபத்தி ரெண்டு ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூபா 53,39,722.69) 2018.09.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து நூற்றுநான்கு ரூபா எண்பத்தொரு சதத்தினையும் (ரூபா 26,98,104.81) 2018.09.30 ஆந் திகதி வரையிலான நிலுவைத் தொகையான இருபத்தாறு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து அறுநூற்றுப்பதினேழு ரூபா எண்பத்தெட்டு சதத்தினையும் (ரூபா 26,41,617.88) இதன்படி மொத்தமாக ஐம்பத்துமூன்று இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எழுநூற்றியிருபத்திரெண்டு ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூபா 53,39,722.69) ;

2. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து நூற்றுநான்கு ரூபா எண்பத்தொரு சதத்திற்காக (ரூபா 26,98,104.81) அறவீடு செய்ய வேண்டிய 18.00% வீதமான வருடாந்த வட்டியினையும் 2018.10.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினைப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 2018.10.01 ஆந் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட மொத்த நிலுவைத் தொகையான இருபத்துமூன்று இலட்சத்து தொண்ணூற்றுநான்காயிரத்து நூற்றுதொண்ணூற்றெட்டு ரூபா அறுபத்துநான்கு சதத்திற்காக (ரூபா 23,94,198.64) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்காகவும் ;

4. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2018, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பழைய கடன் இலக்கம் : 0807200015 ;
புதிய கடன் இலக்கம் : 30372500004)

**அட்டவணை**

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில் வெலிகம பிரதேச சபை எல்லையில், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 380, மிதிகம கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மிதிகம கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டிலக்கம் C உஸ்பண்டாரவத்த என்று அழைக்கப்படும் காணிக்கு 2001, சனவரி 7 ஆந் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். ஜீ. விமலரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 555 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 5 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கு : இதே காணியின் B ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கு : இதே காணியின் 6 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கு : இதே காணியின் 10 ஆம் இலக்க காணித்துண்டும் (15 அடி அகலப் பாதை) ; மேற்கு : இதே காணியின் 4 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பதினொரு தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 11.50பே.) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் மாத்தறை காணிப்பதிவு அலுவலகத்தில் இலக்கம் P 149/ 59 எனும் தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

555 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 10 ஆம் இலக்க காணித்துண்டின் (15 அடி அகலப் பாதை) பாதைக்கான உரிமையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.
பி. நி. அ.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி
நிதிக்கூட்டுத்தாபன வங்கி,
சேர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02.

12-800

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி
(HDFC வங்கி)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

பழைய கடன் இலக்கம் : 2503200046 ; புதிய கடன் இலக்கம் : 402550000026
கடனாளியின் முழுப் பெயர் : வெதரால்லகே சரத் வீரசிரி

"கேகாலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தரிசு யூ. ஐ. ஹெட்டிஆரச்சி என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 1567 ஆம் இலக்கத்தினையும் 2016.07.27 ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக்கொண்ட கடனை வங்கிக்கு மீளச் செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடகுப்பத்திரத்தின்படி, ஐம்பத்தொரு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்தி நாநூற்றி ஐம்பத்திரண்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூபா 51,78,452.86) 2018.10.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான நாற்பத்தேழு இலட்சத்து அறுபத்தாறாயிரத்தி எழுநூற்றறுபத்தாறு ரூபா தொண் ணூற்றிரண்டு சதத்தினையும் (ரூபா 47,66,766.92) 2018.10.31 ஆந் திகதி வரையிலான நிலுவைத் தொகையான நான்கு இலட்சத்து பதினோராயிரத்தி அறுநூற்றெண்பத்தைந்து ரூபா தொண்ணூற்றி நான்கு சதத்தினையும் (ரூபா 4,11,685.94) இதன்படி மொத்தமாக ஐம்பத்தொரு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து நாநூற்றி ஐம்பத்திரண்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூபா 51,78,452.86);

2. மேலும் மேற்குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத நாற்பத்தேழு இலட்சத்து அறுபத்தாறாயிரத்தி எழுநூற்றி அறுபத்தாறு ரூபா தொண் ணூற்றிரண்டு சதத்திற்காக (ரூபா 47,66,766.92) மிதக்கும் வட்டியாக 15.50% வீதம் குறிப்பிட்ட கடனுக்காக 2018.11.01 ஆந் திகதியிலிருந்து 2019.11.01 ஆந் திகதி வரை அறவிடுவதற்கும் அத்துடன் வட்டி வீதம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படும். அதன் பிறகு மிதக்கும் வட்டி வீதம் ஏலவிற்பனைத் திகதிவரை நடைமுறைப்படுத்தப்படும் (அவ்விரு தினங்களும் உட்பட) ;

3. 2018.11.01 ஆந் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட மொத்த நிலுவைத் தொகையான நான்கு இலட்சத்து ஐயாயிரத்து தொளாயிரத்து எண்பத்தைந்து ரூபா தொண்ணூற்று நான்கு சதத்திற்காக (ரூபா 4,05,985.94) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்காகவும் ;

4. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2018, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை

சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், கினிகொட கோரளையில் தெயால தஹமுன பத்துவவில், கேகாலை பிரதேச சபை எல்லையில், கேகாலை பிரதேச சபை பிரிவில் இலக்கம் 14, கரண்டுபன கிராம அலுவலர் பிரிவில் கண்டி - கொழும்பு பிரதான வீதியில் வரிமதிப்பீட்டிலக்கம் எஸ் 32 மற்றும் 34 இல் கரண்டுபண கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டிலக்கம் ஏ இன் போமலுவேவத்த மற்றும் காணித்துண்டிலக்கங்கள் ஏ மற்றும் சீ இன் பிலஉனுமுவேவத்த ஆனால் போமலுவேவத்த என பதிவுசெய்யப்பட்டுள்ள காணிக்கு 2014.08.16 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. பீ. குணசேன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2012/1 என்ற இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. காதர் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1070 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்கக் காணித்துண்டில் காணப்படும் வங்கி மற்றும் ஏ. சீ. பி. குணசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட

*காணி வரைபட இலக்கம் 2012 இன்படி 2 ஆம் 3 ஆம் இலக்க காணித்துண்டுகளின் பகுதிகளும் ; கிழக்கு : காணி வரைபட இலக்கம் 2012 இன் 03 ஆம் இலக்க காணித்துண்டினைப் பிரிக்கும் சீமெந்து மதில் மற்றும் காணி வரைபட இலக்கம் 2012 இன் 2 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியும் ; தெற்கு : கண்டி - கொழும்பு பிரதான பாதையும் மற்றும் காணி வரைபட இலக்கம் 2012 இன்படி 1 ஆம் இலக்க காணித்துண்டினைப் பிரிக்கும் மதிலும் ; மேற்கு : காணி வரைபட இலக்கம் 2012 இன்படி 1 ஆம் இலக்க காணித்துண்டின் மதிலும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பதினைந்து தசம் நான்கு நான்கு ஏழு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 15.447பே.) அல்லது 0.0419 ஹெக்டெயர்களாகும். 2012/ 1 என்ற இலக்க காணிவரைபடத்தின்படி இக்காணித் துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழ வகைகள் மற்றும் அனைத்தும் கேகாலை காணிப்பதிவு அலுவலகத்தில் இலக்கம் D 195/ 126 என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.*

*மேற்குறிப்பிட்ட 01 ஆம் இலக்க காணித்துண்டு கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள அளக்கப்பட்ட ஒரு காணித் துண்டாகும்.*

*மேற்குறிப்பிட்ட போமலுவ வத்த எனப்படும் கரண்டுபன கிராமத்தில் அமைந்துள்ள காணிக்கு, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. பீ. குணசேன என்பவரினால் 2010.11.22 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2012/01 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கு : அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. காதர் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1070 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; கிழக்கு : அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. பி. குணசேன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2750 ஆம் இலக்க காணி வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டினைப் பிரிக்கும் சீமெந்து மதிலும் மற்றும் 2012 ஆம் இலக்க காணி வரைபடத்தின் 03 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கு : கொழும்பு - கண்டி பிரதான வீதியும் ; மேற்கு : காணி வரைபட இலக்கம் 2012 இன்படி 1 ஆம் இலக்க காணித்துண்டினைப் பிரிக்கும் மதிலும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் பரப்பளவு பதினைந்து தசம் நான்கு நான்கு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 15.44பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்துடன் கேகாலை காணிப்பதிவு அலுவலகத்தில் D 195/ 126 என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்/பி. நி. அ.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி,
சேர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02,
*2018, நவெம்பர் 30.*

*12-801*

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - மாத்தறைக் கிளை**

(வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என முன்னர் அழைக்கப்பட்டது)

வாடிக்கையாளர் : மஹிந்த வல்பொலகே மறுபெயர் மஹிந்த வல்பொல மறுபெயர் வல்பொலகே மஹிந்த, இல. 195, "விக்ரறி", சிறிசேன குணதிலக்க மாவத்தை, வல்கம, மாத்தறை.

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால், *2018.10.25* ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் இத்தால் தீர்மானிக்கப்பட்டது.

* *மாத்தறை பிரசித்த நொத்தாரிசு ரீ.என்.பின்னிதியவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.08.18 ஆந் திகதியிடப்பட்ட 3287 ஆம் இலக்க முறி மூலம் பெறப்பட்ட அசையாச் சொத்து, உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் கே. பீ. என். சில்வாவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டும்.*

* *2017.10.26 ஆந் திகதியிடப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் கே. பீ. என். சில்வாவிற்கு வழங்கப்பட்ட அதிகாரம் மீளப் பெறப்படுவதுடன், முன்சொல்லப்பட்ட 2017.10.26 ஆந் திகதியிடப்பட்ட தீர்மானம் இத்தால் தெரிவிக்கப்பட்டதற்கு அமைய மாற்றப்பட்டுள்ளது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி. பொ.மு. (சட்டம்/சபைச் செயலாளர்).

*12-875/1*

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - கறுவாத் தோட்டம் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

வாடிக்கையாளர் : கித்சிறி அத்துலத்முதலி

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால், *2017*, திசெம்பர் *14* ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்

"கித்சிறி அத்துலத்முதலி கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில், கொழும்பு

பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பாயிசினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2016, மாச்சு 2 ஆந் திகதியிடப்பட்ட 2839 மற்றும் 2016, யூன் 20 ஆந் திகதியிடப்பட்ட 2935 ஆம் இலக்க இரு முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2017, நவெம்பர் 16 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது இரண்டு கோடியே நாற்பத்துநான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்தி பன்னிரண்டு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூபா 2,44,18,012.52) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள 2839 மற்றும் 2935 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட இரண்டு கோடியே நாற்பத்துநான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்தி பன்னிரண்டு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூபா 2,44,18,012.52) பணத்தொகையை 2017, நவெம்பர் 17 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோறளவின் பள்ளேபற்றுவில் உள்ள கடுவெல மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பத்தரமுல்லையில் உள்ள பஹல்வெல வீதி, 203ஏ வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள "அலுபோகஹவத்த" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஆர். ஏ. ஜயசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 1993, ஒற்றோபர் 16 ஆந் திகதியிடப்பட்ட 859 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7பி என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடகிழக்கு : வீதிக்கான ஒதுக்கீடு 20 அடி அகலமானது ; தென்கிழக்கு : காணித்துண்டு 7ஏ மற்றும் காணித்துண்டு 6 ; தென்மேற்கு : காணித்துண்டு 7 ; வடமேற்கு : காணித்துண்டு 8 மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 859 இற்கு அமைவான பதினாறு பேர்ச் (0ஏ. 0றூ. 16பே.) விஸ்தீரணமானது, ஹோமாகம காணிப்பதிவகத்தில் பி85/113 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டது.

இது, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிலஅளவை குறித்த விபரங்கள் பின்வருமாறு :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோறளவின் பள்ளேபற்றுவில் உள்ள கடுவெல மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பத்தரமுல்லையில் உள்ள பஹல்வெல வீதி, 203ஏ வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள "அலுபோகஹவத்த" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம்பெற்ற நில அளவையாளர் ஜீ. சந்திரசேனவினால் தயாரிக்கப்பட்ட 1994, சனவரி 9 ஆந் திகதியிடப்பட்ட 121/94 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 7பி1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடகிழக்கு : வீதிக்கான ஒதுக்கீடு 20 அடி அகலமானது (3012 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1); தென்கிழக்கு : எஸ். விஜேமான்ன மற்றும் ஏனையவர்களால் உரிமை கோரப்படும் காணி (வரைபட இலக்கம் 3012 இல் உள்ள காணித்துண்டு 6 மற்றும் எச். எல். சந்திரவதியினால் உரிமைகோரப்படும் காணி (வரைபட இலக்கம் 859 இல் உள்ள காணித்துண்டு 7ஏ) ; தென்மேற்கு : எச். எல். சந்திரவதியினால் உரிமை கோரப்படும் காணி (859 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 7ஏ) ; வடமேற்கு : எச். எல். சீமனினால் உரிமை கோரப்படும் காணி (வரைபட இலக்கம் 3012 இல் உள்ள காணித்துண்டு 8) அத்துடன், சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 121/94 இற்கு அமைவான பதினாறு பேர்ச் (0ஏ. 0றூ. 16பே.) விஸ்தீரணமானது.

முன்சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி மிக அண்மையில் நில அளவை செய்யப்பட்டதன் விபரங்கள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோறளவின் பள்ளேபற்றுவில் உள்ள கடுவெல மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பத்தரமுல்லையில் உள்ள பஹல்வெல வீதி, 203ஏ வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள "அலுபோகஹவத்த" பிரிவு 1 என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். நடராஜாவினால் தயாரிக்கப்பட்ட 2011, மே 5 ஆந் திகதியிடப்பட்ட 133 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7பி1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடகிழக்கு : வீதிக்கான ஒதுக்கீடு 20 அடி அகலமானது (3012 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1) ; தென்கிழக்கு : எஸ். விஜேமான்ன மற்றும் ஏனையவர்களால் உரிமை கோரப்படும் காணி (வரைபட இலக்கம் 3012 இல் உள்ள காணித்துண்டு 6 மற்றும் எச். எல். சந்திரவதியினால் உரிமைகோரப்படும் காணி (வரைபட இலக்கம் 859 இல் உள்ள காணித்துண்டு 7ஏ) ; தென்மேற்கு : எச். எல். சந்திரவதியினால் உரிமை கோரப்படும் காணி (859 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 7ஏ) ; வடமேற்கு: எச். எல். சீமனினால் உரிமை கோரப்படும் காணி (வரைபட இலக்கம் 3012 இல் உள்ள காணித்துண்டு 8) அத்துடன், சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 133 இற்கு அமைவான பதினாறு பேர்ச் (0ஏ. 0றூ. 16பே.) விஸ்தீரணமானது.

அத்துடன், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ரி. ஏ. புறாவினால் தயாரிக்கப்பட்ட 1992.05.05 ஆந் திகதியிடப்பட்ட 3012 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பாதை உரிமையும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி. பொ.மு. (சட்டம்/சபைச் செயலாளர்).

12-875/2

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2018, ஒற்றோபர் 30 ஆந் தேதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

“(கடன்பெறுநரான) S/MA/KI/4/196 ஆம் சான்றிதழ் இலக்கத்தின்கீழ் தென் மாகாணத்தின் மாகாண வியாபாரப் பெயர்கள் பதிவாளருடன் முறையாகப் பதிவுசெய்யப்பட்டதும் புஹுல்வல்லவில் அதன் பிரதான தொழிலிடத்தைக் கொண்டுள்ளதுமான “பட்டதொல எஸ்டேட் சினமன் புரொசெசர்ஸ்” என்னும் பெயர்மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தனியுரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற மாத்தறையைச் சேர்ந்த சந்தன குமார் ஜீவனபடு சில்வா என்பவர் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ (வங்கி) சார்பில் பிரசித்த நொத்தாரிசு திருவாட்டி பி.ஏ. அநுருத்திகா என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.11.10 ஆந் தேதிய 2061 ஆம் இலக்க முறிமூலமும் 2015.08.07 ஆந் தேதிய 2364 ஆம் இலக்க முறிமூலமும் பிரசித்த நொத்தாரிசு எஸ். டீ. ஜே. பத்திரண என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.09.20 ஆந் தேதிய 96 ஆம் இலக்க முறிமூலமும் ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்டனவும் இதற்கான அட்டவணையின் பாகம் I பாகம் II, பாகம் III என்பவற்றில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டனவுமான ஆதனங்களினதும் வளவுகளினதும் பிணைப்பொறுப்புக் கெதிராக வழங்கப்பட்ட கடன்களின் / வசதிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும்.

அத்துடன் சந்தன குமார் ஜீவனபடு சில்வா என்பவர் கீழே பாகம் I, பாகம் II மற்றும் பாகம் III ,இல் விவரிக்கப்பட்ட ஆதனங்களினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரராகவிருப்பதனால் சொல்லப்பட்ட 2364, 2061 மற்றும் 96 ஆம் இலக்க முறிகளின்கீழ் தமது இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறையை வங்கிக்கு ஈடுவைத்துள்ளாராதலாலும்.

அத்துடன் 2018 செத்தெம்பர் 30 ஆந் தேதியன்றுள்ள வாறாக இருபத்திநான்கு மில்லியன் எழுபத்திரெண்டாயிரத்து இருநூற்றியிருபத்தேழு ரூபா முப்பத்திநான்கு சதம் (ரூபா 24,072,227.34) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகள்மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு சொல்லப்பட்ட இருபத்திநான்கு மில்லியன் எழுபத்திரண்டாயிரத்தி இருநூற்றியிருபத்தேழு ரூபா முப்பத்திநான்கு சதம் (ரூ24,072,227.34) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் அத்துடன்.

(i) சொல்லப்பட்ட முறிகள்மீது வருமதியாகவுள்ள ஐந்து மில்லியன் எண்ணூற்றி பதினேழாயிரத்துத் தொளாயிரத்து இருபது ரூபா (ரூபா 5,817,920.00) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினான்கு சதவீத (14%) வட்டியையும்,

(ii) சொல்லப்பட்ட முறிகள்மீது வருமதியாகவுள்ள ஐந்து மில்லியன் எண்ணூற்றி முப்பத்திமூவாயிரத்தி முந் நூற்றிநாற்பது ரூபா (ரூபா 5,833,340.00) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினெட்டு தசம் ஏழு ஐந்து சதவீத (18.75%) வட்டியையும்.

(iii) சொல்லப்பட்ட முறிகள்மீது வருமதியாகவுள்ள பத்து மில்லியன் எண்ணூற்றி இருபத்தேழாயிரத்தி இருநூற்றித் தொண்ணூற்றாறு ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 10,827,296.76) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினேழு தசம் இரண்டு ஐந்து சதவீத (17.25%) வட்டியையும்

2018, ஒற்றோபர் 01 ஆந்நாளிலிருந்து விற்பனைத் தேதிவரை அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட முறிகள்மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனங்களும் வளவுகளும் ஏலதாரரான திரிவங்க அன்ட் சேனாநாயக்க அவர்களினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.”

## மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அட்டவணை

பாகம் - I

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை மாநகரசபை எல்லைகளினுள்ளும் நான்கு எல்லைகளினுள்ளும் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவு தொட்டமுன கிராம அலுவலர் பிரிவில் நூபேயில் அமைந்துள்ளதும் குமாரதுங்க மாவத்தையில் 317 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் “ஆதம்கேவத்த” மற்றும் விஜேநாயக்க கெதரவத்த எனவழைக்கப்படும் காணிகளின் காணித்துண்டொன்றாக (காணித்துண்டம் 1 மற்றும் 3 இன் காணித்துண்டம் 1 மற்றும் 2 இன் ஒன்றுசேர்க்கையாகவுள்ளதும்) உரிமம்பெற்ற நிலஅளவையாளர் சீ. எஸ். ஜயவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.09.23 ஆந் தேதிய 2009/ 94 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் A பின்வரும் எல்லைகளை யுடையது - வடக்கு : குமாரதுங்க மாவத்தை; கிழக்கு: அதே காணியின் காணித்துண்டம் B; தெற்கு : அதேகாணியின் காணித்துண்டம் B, 2 ஆம் வரிமதிப்பீட்டி லக்கத்தைக் கொண்டதும் 1989/47 ஆம் இலக்க வரைபடத்தி லுள்ளதுமான காணித்துண்டம் 4 மற்றும் 319 ஆம் வரிமதிப்பீட்டி லக்கத்தைகொண்ட விஜேநாயக்கதெதர வத்தவின் ஒருபாகம்; மேற்கு : 319 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட விஜேநாயக்கதெதர வத்தவின் ஒரு பாகம். பரப்பளவில் இது பன்னிரண்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.25பே.) கொண்டுள்ளதுடன் மாத்தறைக் காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் A 780/42 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

பாகம் - II

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மொறவக் கோறளையில் கொட்டபொல பிரதேச செயலகப் பிரிவு வரல்ல கிராம அலுவலர் பிரிவில் வரல்லவில் அமைந்துள்ளதும் பீலஹேன மற்றும் பீலஹேன தெனிய மறுபெயர் “மாகம ஓகந்த” எனவழைக்கப்படும் காணிகளினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் அருண ஜயந்த ஜயசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.09.13 ஆந் தேதிய 219/2013 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A5 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் A5 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : அதேகாணியின் காணித்துண்டம் B மற்றும் இ.கி.வ. 41 இல் காணித்துண்டம் 22; கிழக்கு : இ..கி.வ. 41 இல் காணித்துண்டம் 22; தெற்கு : நில்வல கங்கைவழியான ஒதுக்கிடம்; மேற்கு : மேற்கூறப்பட்ட 219/2013 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் A1 மற்றும் A4 (வீதி). பரப்பளவில் இது இரண்டு ஏக்கர்களை (2ஏ. 0றூ. 0பே.) கொண்டுள்ளதுடன் கொட்டபொல காணிப்பதிவகத்தில் தொகுதி /பக்கம் B 36/03 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

பின்வரும் வீதியின் மீதான செல்வழியுரிமையுடன்சேர்த்து

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மொறவக் கோறளையில் கொட்டபொல பிரதேச செயலகப் பிரிவு வரல்ல கிராம அலுவலர் பிரிவில் வரல்லவில் அமைந்துள்ளதும் பீலஹேன மற்றும் பீலஹேன தெனிய மறுபெயர் “மாகம ஓகந்த” எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் அருண ஜயந்த ஜயசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.09.13 ஆந் தேதிய 219/2013 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A4 (வீதி) எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் A4 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : காலி தெனியாயவிலிருந்தான பிரதான வீதி, அதேகாணியின் காணித்துண்டம் B; கிழக்கு: 219/2013 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A2, A3 மற்றும் A5 பீலஹேனவின் ஒருபாகம்; தெற்கு : 219/2013 ஆம் இலக்க, வரைபடத்தில் காணித்துண்டம் A1; மேற்கு: 219/2013 ஆம் இலக்க, வரைபடத்தில் காணித்துண்டம் A1. பரப்பளவில் இது, ஒரு றூட் இருபத்தெட்டுத் தசம் ஐந்து ஏழு பேர்ச்சுக்களை (0ஏ. 1றூ. 28.57பே.) கொண்டுள்ளதுடன் கொட்டபொல காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் B 36/56 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

பாகம் - III

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் கங்கபொட பத்து கிரிந்த புஹுல்வல்ல பிரதேச செயலகப் பிரிவினுள் கிரிந்த (மேற்பிரிவு) கிராம அலுவலர் பிரிவில் கிரிந்தவில் அமைந்துள்ளதும் “பட்டதொல ஹேன” மறுபெயர் கொடல்ல ஹேன (TP 155666) எனவழைக்கப்படும் காணிகளினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் பீ. எம். அபேகுணவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.10.09 ஆந் தேதிய 613 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 3 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 3 பின்வரும் எல்லைகளை யுடையது - வடக்கு : அதேகாணியின் காணித்துண்டம் 2; கிழக்கு: அதேகாணியின் காணித்துண்டம் 2; தெற்கு : அதேகாணியின் காணித்துண்டம் 2 மற்றும் மாத்தறையிலிருந்து ஹக்மணவுக்குச் செல்லும் வீதி, வலகந்தவுக்குச் செல்லும் வீதி; மேற்கு : மாத்தறையிலிருந்து ஹக்மணவுக்குச் செல்லும் வீதி, வலகந்தவுக்குச் செல்லும் வீதி, காணித்துண்டம் 4, காணித்துண்டம் 5 (12 அடி அகலமான வீதி) மற்றும் அதேகாணியின் காணித்துண்டம் 2. பரப்பளவில் இது, ஒரு றூட் இருபத்திநான்கு தசம் ஏழு பேர்ச்சுக்களை (0ஏ. 1றூ. 24.7பே.) கொண்டுள்ளதுடன் மாத்தறைக் காணிப்பதிவகத்தில் தொகுதி /பக்கம் K 29/13 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட காணி பின்வரும் காணியின் ஒரு பாகமாகவுள்ளது

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் கங்கபொட பத்து கிரிந்த புஹுல்வல்ல பிரதேச செயலகப் பிரிவினுள் கிரிந்த (மேற்பிரிவு) கிராம அலுவலர் பிரிவில் கிரிந்தவில் அமைந்துள்ளதும் “பட்டதொலஹேன மறுபெயர் கொடல்ல

ஹேன (TP 155666)" என அழைக்கப்படும் காணிகளினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. எம். அபேகுணவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.09.05 ஆந் தேதிய 2439 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 மற்றும் 2 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 மற்றும் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : மில்லகஹ கணத்த, TP 160314, பட்டதொலஹேன, TP 155663 மற்றும் TP 15564; கிழக்கு : இல்லுக்கட்டிய பன்சல வத்த, TP 132574, TP 160312 மற்றும் TP 160310 ; தெற்கு : TP 160310, என்பதையும் மற்றும் அரச காணிகளையும் தனிவேறாக்குகின்ற எல ; மேற்கு: வலகந்தவுக்குச் செல்லும் வீதி. பரப்பளவில் இது நான்கு ஏக்கர், ஆறு றூட், ஐந்து தசம் இரண்டு பேர்ச் (4ஏ. 6றூ. 5.2பே.) கொண்டுள்ளதுடன் மாத்தறைக் காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் D 117/161 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

சாதனத்துடன் மின்சார வழங்கல் முறைமை, நீர்வழங்கல் முறைமைச் சாதனம், தொலைத்தொடர்புச் சாதனம் மற்றும் காற்றுச்சீராக்கற் சாதனம் உட்பட மேலே மேலும் முழுமையாக குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுடன் இப்போது இணைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட அல்லது இதன்பின்னர் காலத்துக்குக்காலம் இணைக்கப்படக்கூடிய அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும் சாதனம் பொருத்திகள் இணைப்புக்கள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் அவை தனித்தனியாகவும்.

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ,

12-727

---

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2018.11.26 ஆந் அன்று கீழ்வரும் தீர்மனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பஹலகே சமித் சந்தன அபேகுணவர்தன

"பிணைப்படுத்தியர் மற்றும் அடமானதாரராகிய பஹலகே சமித் சந்தன அபேகுணவர்தன பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. ரொமானி தலவத்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, ஆனி 23 ஆந் திகதிய 528 ஆம் இலக்க மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். நதீகா ஷாமலி குமாரி ராஜகபக்ஷவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, வைகாசி 06 ஆந் திகதிய 387 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறிகள் மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் பஹலகே சமித் சந்தன அபேகுணவர்தனவினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்.

மற்றும்குறிப்பிட்டபஹலகேசமித்சந்தனஅபேகுணவர்தன குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவைச் செலுத்தத் தவறியுள்ளமையினாலும்.

